சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 07.04.2026
வா.சா.1 – ஞானபிரகாசம் S/o மணி
OS No.238/2014
(சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யபபடுகிறார்.)
குறுக்கு விசாரணை :

வழக்கு தாக்கல் செய்ததற்கும் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்ததற்கும் நான் தான் வழக்கறிஞரிடம் விபரம் கூறினேன். வழக்கு சொத்தை பதிந்து கொடுக்கவேண்டி வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். சொத்திற்கு நான் பணம் கொடுத்திருக்கிறேன். எனக்கு தமிழில் எழுத, படிக்க தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது. 15 ஆண்டுகாலமாகிவிட்டபடியால் நினைவில்லை. பொதுவாக ஒரு சொத்தை கிரையம் முடிக்கும் போது மூலபத்திரங்கள், வில்லங்கம் எல்லாம் சரிபார்த்துதான் வாங்குவார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான மூலபத்திரங்கள், வில்லங்கம் எல்லாம் சரிபார்த்து தான் கிரைய ஒப்பந்தம் போட்டேனா என்றால் ஆமாம். மூலபத்திரத்தை எல்லா் பிரதிவாதி தரப்பில் என்னிடம் காண்பித்துவிட்டு மீண்டும் அவர் பெற்றுகொண்டு சென்றுவிட்டார்கள். மேற்படி விபரம் எனது வழக்குரையிலும், வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பிலும் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. மூலபத்திரங்கள் அனைத்தும் என் கைவசம் தான் உள்ளன என்றும் வழக்கிற்காக இல்லை என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் வழக்குரையில் 4வது பத்தியில் தாவா வழக்கிடை சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், 6 லட்சம் ரூபாய் கிரையம் பேசி அதற்கு ஆதரவாக 5 லட்சம் ரூபாய் கிரைய தொகையை அட்வான்சாக பெற்றுகொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் 5 லட்சம் ரூபாய் அட்வான்சாக தொகை ரொக்கமாக பெற்று கொண்டதாக

பத்திரத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் வழக்கறிஞர் அறிவிப்பிலும்(வா.சா.ஆ.3) ரொக்கமாக 5 லட்சம் ரூபாய் பெற்று கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ-1 பதிவு செய்யப்படும் போது ரொக்கமாக 5 லட்சம் ரூபாய் கொடுக்கப்படவில்லையா என்றால் ரொக்கமாக கொடுக்கவில்லை, வங்கிகணக்கு மூலமாக 5 லட்சம் ரூபாயை செலுத்திவிட்டோம்.என் மச்சினன் ரவி வா.சா.ஆ.2 எனக்கு 5 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும் அதை நான் பிரதிவாதியின் வங்கிகணக்கில் செலுத்தும்படி அறிவுறுத்தினனேன். வழக்குரையிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் ரொக்கமாக 5 லட்சம் ரூபாய் பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்வது தவறு தானே என்றால் சரிதான். வங்கிகணக்கு மூலமாக தான் செலுத்தினேன். மேற்படி எனது மைத்துனர் ரவி மூலமாக தான் பிரதிவாதிக்கு 5 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்திலோ, வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பிலோ, வழக்குரையிலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 5 லட்சம் ரூபாய் என் மைத்துனர் கொடுத்த தொகையை மறைத்து வா.சாஆ.1 ஆவணம் ஏற்படுத்தியதாலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், வழக்குரையிலும் மேற்படி விபரத்தை மறைத்ததால் இந்த வழக்குநிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி கியைர ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2 வருட காலத்திற்குள் மீத தொகை 1 லட்சம் ரூபாய் செலுத்தி கிரைய பத்திரம் ஏற்படுத்தி கொள்வதாக பேசப்பட்டது. 6 லட்சம் ரூபாய் கியரைய தொகையில் 5 லட்சம் ரூபாய் 80 சதவீதம் செலுத்திவிட்ட நிலையில் மீத தொகை 1 லட்சம் ரூபாய்க்கு 2 ஆண்டுகாலஅவகாசம் கொடுக்கவேண்டிய என்னவென்றால் பிரதிவாதி அவரது சகோதரர்களுகுள்ளாக பிரச்சினை ஏற்பட்டதால் பணம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேலும் 5,70,000ரூபாய் தான்

கொடுக்கப்பட்ட தொகை. வழக்கு சொத்திற்கான பட்டா மற்ற ஆவணங்கள் எல்லாம் பிரதிவாதி பெயரில் தான் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கிற்காக பிரதிவாதிக்கும் மற்ற சகோதரர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் வா.சா.ஆ.2, 01.10.2012 அன்று மீண்டும் காலஅவகாசம் 15.02.2014 வரை அவகாசம் நீட்டிப்பதாக குறிப்பிட்டு மேற்குறிப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 2வது முறையாக காலஅவகாசம் நீட்டித்தபோது 70000ரூபாய் செலுத்தி 30000ரூபாய் பாக்கி இருப்பதாக காலஅவகாசம் எழுதப்பட்டது என்றால் சரிதான். 30000ரூபாய் என்பது ஒரு சிறிய தொகை என்றும் அதை கொடுப்பதற்கு கால அவகாசம் 3-1/2 வருடம் நீட்டிப்பது அவசியம் அற்றது என்றும் ஆகவே வா.சா.ஆ.1 கடனிற்காக ஏற்பட்ட ஆவணமே தவிர சொத்து கிரையத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. என் மைத்துனர் ரவி பிரதிவாதியின் வங்கிகணக்கிற்கு 2,50000ரூபாய் தான் செலுத்திவிட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் மொத்தம் 5 லட்சம் ரூபாய் செலுத்திவிட்டார் என்ற விபரம் தெரியும். கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட காலகட்டத்தில் என் மைத்துனர் ரவி சென்னையில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான்.மைத்துனர் ரவி வட்டிதொழில் செய்து வருகிறார் என்றும் அவர் 2,50000ரூபாய் கடனிற்காக கொடுத்தாரே சொத்து வாங்குவதற்காக கொடுக்கவில்லை என்றும் அவர் வெளியூரில் இருப்பதால் பிணையத்திற்காக கடன் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி தொகையை பிரதிவாதி மாதம் 15000ரூபாய் வீதம் அசலும் வட்டியுமாக செலுத்திவிட்டார் என்றும் ஆனால் அந்த ஆவணத்தை பயன்படுத்தி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரர் ராஜேந்திரனை தெரியுமா என்றால் தெரியும். ராஜேந்திரன்

50000ரூபாய் திருப்பி செலுத்த வேண்டிய பாக்கி உள்ளது என்றால் சரிதான். 50000ரூபாய் கடனிற்காகதான் வழக்கு சொத்திற்கான மூலாதார பத்திரங்களை நான் வைத்து கொண்டு மோசடியாக இந்த வழகசை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பேச்சுவார்த்தை ஏற்பட்டு அதனடிப்படையில் தான் வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டி சீராய்வு மனு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் நிலுவையில் இருநதது என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு EP 118/2019 தாக்கல் செய்து எனது தரப்பில் நிலுவையில் இருந்து என்றால் சரிதான். மேற்படி மனு நிலுவையில் இருக்கும் போது தான் வா.சா.ஆ.1 ஆவணத்தை என்னிடம்அசல் பத்திரம் என்னிடம் இருப்பதில் ஆட்சேபணை இல்லை என்று பிரதிவாதி கூறியதன் அடிப்படையில் அசல் பத்திரம் என்னிடம் இருந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணமே தவிர சொத்து கிரையத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் தான் பெற்ற தொகையை திருப்பி செலுத்திவிட்டநிலையில் மோசடியான ஆவணங்களை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல

மறுவிசாரணை :

பிரதிவாதிக்கு செலுத்த வேண்டிய தொகை 30000ரூபாய் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.04.07 20:03:31 +0530

Sub Judge
Melur